# புதிய போத்தலில் பழைய வைன் :

## நவதாராளவாத யுகத்தில் பழைய ஆட்சியதிகாரவாதத்தின் மீள்திரும்பல்

விதுர பிரபாத் முணசிங்க
இசான் சாமர படவலகே



சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை

# புதிய போத்தலில் பழைய வைன்:

## நவதாராளவாத யுகத்தில் பழைய ஆட்சியதிகாரவாதத்தின் மீள்திரும்பல்

மார்ச், 2019

# புதிய போத்தலில் பழைய வைன் :

## நவதாராளவாத யுகத்தில் பழைய ஆட்சியதிகாரவாதத்தின் மீள்திரும்பல்

**© லோ அன்ட் சொஸைட்டி டிரஸ்ட், 2019**

ISBN 978-955-1302-81-8

இந்த ஆவணம் மற்றும் அதன் வெளியீட்டாளர் பற்றிய முறையான அறிமுகப்படுத்தலின் பின்னர் இந்நூலின் உள்ளடக்கத்தை அல்லது அதன் பகுதிகளை வணிகம் அல்லாத நோக்கத்திற்காக மாத்திரம் மேற்கோள் காட்டுவதற்கும் பிரதி எடுப்பதற்கும் அனுமதியுண்டு.

**விதுர பிரபாத் முணசிங்க**

**இசான் சாமர படவலகே**

**மீள்வாசிப்பு மற்றும் சரிபார்த்தல் -** மாடசாமி விஜயகாந்த்

**அட்டைப்படம் மற்றும் பக்க ஆக்கம் -** பிரபாத் ஹேமந்த குமார

**வெளியீடு :**

**சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை**

இல. 03, கின்சி டெரஸ்,

கொழும்பு 00800.

இலங்கை.

தொலைபேசி : +94 (0) 11 268 48 45

தொலை நகல் : +94 (0) 11 2686843

இணையம் : www.lstlanka.org

# புதிய போத்தலில் பழைய வைன் :
## நவதாராளவாத யுகத்தில் பழைய ஆட்சியதிகாரவாதத்தின் மீள்திரும்பல்[1]


**விதுர பிரபாத் முணசிங்க**[2]

**இசான் சாமர படவலகே**[3]


### அறிமுகம்

வெகுசனத் தலைவர்களெனத் தம்மைக் கூறிக்கொள்பவர்கள் மனித உரிமைகளுக்கு ஏற்படுத்தும் சவால்கள் எனும் தலைப்பில் லண்டன் பொருளியல் கல்லூரியில் உரையாற்றிய அதீத வறுமை மற்றும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட தூதுவரான பிலிப் அல்ஸ்டன் பின்வரும் கருத்துக்களைத் தனது உரையில் குறிப்பிட்டார்:

> “...மனித உரிமைகள் இயக்கம் இப்பொழுது எதிர்நோக்கும் சவால்கள் நாம் முன்பு எதிர்நோக்கியவற்றைவிட அடிப்படையில் வித்தியாசமானவை. அறிஞர்கள் எமக்கு கூறியுள்ளது போல அவை மனித உரிமைகளின் முடிவுக்காலம் என்பதைக் குறிக்காது. அதேபோல

---

1. இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் ஆசிரியர்களின் கருத்துக்களே அன்றி இவை அவசியம் சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தினதோ அதன் சபையினதோ கருத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

2. விதுர பிரபாத் முணசிங்க சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் சிரேஸ்ட ஆய்வாளார்.

3. இஷான் சாமர வட்டவலகே சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வு உதவியாளார்.

> மனித உரிமைகள் அவற்றின் தாராளவாத மேட்டிய உறவுகளினால் அளவுக்கதிகமாக சமரசம் செய்யப்பட்டு விட்டதால் வெகுசனத் தலைவர்களுக்கு எதிரான போராட்டத்தில் அவை பயனற்றவையென அறிஞர்கள் எமக்குக் கூறியுள்ளதையும் குறிக்காது. அல்லது நாம் பின்-மனித உரிமைகள் யுகத்தினுள் நுழைந்துள்ளோம் என்று அறிஞர்கள் கூறியுள்ளதையும் குறிக்காது. அல்லது நாம் அனைவருமே கட்டாயம் நம்பிக்கை இழந்தே முன்செல்ல வேண்டுமென அறிஞர்கள் எமக்கு கூறியுள்ளதையும் அது குறிக்காது. அல்லது எமக்கெல்லாம் மிகவும் பரிச்சயமான பழைய ஆட்சியதிகாரக் கொள்கைவாதத்துடன் சேர்ந்துள்ள புதிய வெகுசன வாதத்தினால் உருவாக்கப்பட்டுள்ள பல சவால்களை எதிர்ப்பதற்கு மனித உரிமைகள் தவிர்ந்த கருவிகளைக் கண்டுபிடிப்பதற்கான மூர்க்கமான தேவை தற்போது உள்ளது என்று அறிஞர்கள் எமக்குக் கூறியுள்ளதையும் அவை குறிக்காது.”[4]

அல்ஸ்டன் குறிப்பிடுவதற்கமைய புதிய வெகுசனவாத சவால் என்பது தேசிய பாதுகாப்பு, இறைமை மற்றும் பொருளாதாரத் தாராளவாதம் ஆகியவற்றின் பழைய ஆட்சி அதிகார வாதங்களினை அடிப்படையாகக் கொண்டுள்ளது[5]. இவ்வாதங்கள் அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுடே, பிரேஸில் ஜனாதிபதி மெசையாஸ் பொல்சனாரோ, போலந்து ஜனாதிபதி அன்சீர் டுதா மற்றும் ஹங்கேரி ஜனாதிபதி ஜெனர்ஸ் அடர் போன்ற தற்கால வெகுசன தலைவர்களெனத் தம்மைக்

4. பிலிப் அல்ஸ்டன். “The Populist Challenge to Human Rights.” *in Journal of Human Rights Practice*, Volume 9, Issue 1, (2017): 1–15.

5. Ibid.

கூறிக்கொள்ளும் உலகத் தலைவர்களினால் பரப்பப்பட்டு வருகின்றன. பிரக்சிட்டுக்கு சார்பான விவாதங்களிலும் இதனையொத்த வாதங்களே பயன்படுத்தப்பட்டன.[6] அல்ஸ்டனின் கருத்துப்படி சர்வதேச மனித உரிமைகளின் ஆளுகை முறைமையின் பிரதான தூண்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதற்கு விருப்பம் தெரிவிக்கின்ற அதிகரித்த அளவிலான பல்வகைமைமிக்க பெரும் எண்ணிக்கையிலான அரசாங்கங்கள் அமெரிக்காவின் பின்னால் திரளுகின்ற சக்தியும் வலுமிக்க நாடுகளாக உருவாகி வருகின்றன.'[7] வரலாறு நெடுகிலும் மனித உரிமைகளுக்கு சவால் விடுத்த இவ்வாறான கூட்டமைப்புக்கள் இருந்தே வருகின்றன. ஆனால், அண்மைக்காலத்தில் அமெரிக்காவும் ஏனைய முன்னணி மேற்கு மற்றும் இலத்தீன் அமெரிக்க அரசாங்கங்களும் இவ்வாறான உணர்வுகளுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டினை எடுத்து வருகின்றன. இவையெல்லாம் மனித உரிமைகளை மேம்படுத்தும் ஒரே நோக்கத்துடனான அரசியல் சாராத செயற்பாடுகளல்ல என்பதை நாம் அனைவரும் அறிந்தபோதிலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொதுக்கடப்பாடு ஒன்று இருந்தது. மாறாக, நிகழ்கால சவால் முன் தம்மை மனித உரிமைகள் பாதுகாவலாளர்களாகச் சித்தரித்தவர்களிடம் இருந்தே வருகின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் ஓர் அசௌகரியமான விடயம் என்கின்ற போதும் அது அபிவிருத்தியிலே தலையீடு செய்கின்ற ஒரு விடயம் என்கின்ற கருத்தியல் அரச மற்றும்

---

6. Timothy B. Lee. "Brexit: the 7 most important arguments for Britain to leave the EU,"www.vox.com, accessed November 15, 2018, https://www.vox.com/2016/6/22/11992106/brexit-arguments.

7. பிலிப்ஸ் ஹல்ஸ்டன். "The Populist Challenge to Human Rights." *in Journal of Human Rights Practice*, Volume 9, Issue 1, (2017): 1–15.

தனியார் துறைகளில் நிலவி வருகின்றது.[8] அண்மைக்காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மூன்று தொழிலாளர் போராட்டங்களை இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கிறது (இலங்கை டெலிகொம் மனித வலுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், ருகுணு மாகம்புர துறைமுக மனிதவலுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் மற்றும் இரத்மலானை அசோசியேடட் பெட்டரி மெனுபக்சரரின் மனிதவலுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்). இவை உரிமைகள் எனும் விடயங்கள் எழுப்பப்படுவதற்குக் காரணமாக இருந்த பொருளாதார நிகழ்வுகளை அடையாளம் காண்பதையும் இந்நிகழ்வுகளுக்கும் மனித உரிமைகளுக்கு எதிரான சொல்லாடல்கலுக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று தொழிலாளர் போராட்டங்களையும் ஒன்றாக இணைக்கின்ற ஒரு பொதுவான இழையினை நாங்கள் தெளிவாக அடையாளம் காணமுடியும். அதுவே மனிதவலுவினை விநியோகிக்கின்ற முகவர்களிடமிருந்து அதனை வாடகைக்குப் பெறும் நடைமுறையாகும். ஒவ்வொரு தொழிலாளர் போராட்டத்தினையும் மேலும் ஆராய்வதற்கு முன்னர் மூன்றாம் தரப்பு மனிதவலு விநியோக முகவர்களின் மூலமாக மனிதவலுவினை வாடகைக்கு அமர்த்தும் நடைமுறையின் வரலாற்று ரீதியான பரிணாமத்தினை மீளாய்வு செய்வது முக்கியமானதாகும்.

## ஊழியத்தில் ஏற்பட்டுள்ள நெறி உதாரண மாற்றம்?

இலங்கையிலே திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட உடனேயே 1980களின் ஆரம்ப காலகட்டத்தில் இலங்கையின் முதலாவது மனிதவலு விநியோக முகவர் உருவாகியது.[9]

---

8. ராதிகா குமாரசுவாமி. "International Human Rights: Dispelling the Myths," https://groundviews.org, accessed November 15, 2018. https://groundviews.org/2014/08/28/international-human-rights-dispelling-the-myths-by-radhika-coomaraswamy/

9. விதுர முணசிங்க மீள் கற்பனை செய்தல் '*The Worker' and Resistance in the Neo-Liberal Era* (Colombo: Law & Society Trust, 2018), 13.

இன்று அதிகமான தனியார்துறை நிறுவனங்களும் அரசதுறை நிறுவனங்களும் தமது மனிதவலுத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு மனிதவலு விநியோகிக்கும் முகவர்களை நாடுகின்றனர்.[10] மனிதவலு விநியோக முகவர்களின் அறிமுகத்துடன் நவீன கைத்தொழில்துறை, முதலாளித்துவ சமூகங்களில் உருவாகிய செம்மையான தொழிற்சாலைகளில் காணப்பட்ட ஊழியர் - தொழில் வழங்குநர் உறவு மாதிரியானது சிக்கலாக்கப்பட்டது. இம்முகவர்கள் தொழில் உறவுகளில் மூன்றாம் தரப்பாக மாறி புதிய சிக்கல்களை உருவாக்கினர்[11]. 1960களில் கேனேசியன் பொருளாதார மாதிரிகள் முகம்கொடுத்த சவால்களினால் இப்புதிய தொழில் வழங்குநர் - ஊழியர் உறவு மாதிரி உருவாக ஆரம்பித்தது.[12] தொழில் வழங்குநர் - ஊழியர் உறவுகளில் காணப்பட்ட இறுக்கம், அரசிடம் ஒப்படைக்கப்பட்ட சமூக பாதுகாப்புப் பொறுப்பு மற்றும் தொழிற்படையினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியன பொருளாதாரத்திற்கான தடைகளாக அடையாளம் காணப்பட்டன. இதற்கமைய சந்தையிலே சந்தைச் சமிக்ஞைகளை (விலைகள்) ஊகித்துக் கொள்வதற்கு இயலுமாகுவதற்காக போதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை எனும் அடிப்படையில் சந்தையிலே அரசாங்கத்தின் தலையீடு

---

10. ஆரம்பகால கைத்தொழில் முதலாளித்துவ சமூகங்களில் நவீன தொழிற்சாலைகள் தோன்றின. இதில் கிடைக்கக்கூடியதாக இருந்த தொழில் வாய்ப்பு கிரமமானதாகவும் முழுநேர அடிப்படையிலானதும் ஊதியம் வழங்குகின்ற தொழில் வாய்ப்பாகவும் மிக இறுக்கமான அதிகாரவரிசைக் கட்டுப்பாட்டினை தொழிற்சாலை முகாமைத்துவம் கொண்டிருந்ததாகவும் காணப்பட்டது. societies Edgell, Stephen. Sociology of Work: Continuity and Change in Paid and Unpaid Work (London: Sage Publications, 2006), 1-27.

11. Ibid.

12. டேவிட் ஹாவே. நவதாராளவாத தளங்கள். சமமற்ற புவியில் அபிவிருத்தி கோட்பாட்டினை நோக்கி Hettner Lecture 2004, Franz Steiner Verlag, 2005. https://d-nb.info/974905585/04

குறைக்கப்பட வேண்டுமெனும் கருத்தியல் உருவாக்கப்பட்டது. இதனால் தொழிற் செயன்முறைகள், தொழிற் சந்தைகள், பண்டங்கள் மற்றும் நுகர்வுப் பாங்குகள் நெகிழ்வுத்தன்மை[13] மிக்கனவாக மாற்றப்படுவடுவதற்காக சடுதியான மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு அவை தொழில் வழங்குநர்களுக்கு அதிக சாதகமானவையாகவும் ஊழியர்களுக்கு சாதகமற்றனவையாகவும் மாறின. உறுதியான தனியார் காணி உரிமைகள், திறந்த சந்தைகள் மற்றும் சுதந்திர வர்த்தகம் ஆகியவற்றினால் கட்டமைக்கப்பட்ட நிறுவன ரீதியான சட்டகத்தின் கீழ் தனிப்பட்ட தொழில் முயற்சியாண்மையின் உரிமைகளை விடுதலை செய்வதன் மூலமாக மானுடத்தின் நன்மைகள் மேலும் மேம்படுத்தப்பட முடியும் என்கின்ற நம்பிக்கையினையே இம்மாற்றங்கள் அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்நம்பிக்கைள் சந்தை அடிப்படைவாதம் என்கின்ற வடிவினைக் கொண்டிருந்தன. இன்று இந்த அரசியல் பொருளாதார சித்தாந்தமே நவதாராளவாதமென அறியப்படுகிறது. தொழிற்சந்தையின் ஒழுங்கு விதிகளை அகற்றியமையே நெகிழ்வுத்தன்மைமிக்க திரட்டலினை அடிப்படையாகக் கொண்ட சந்தை அடிப்படைவாதத்தின் இன்றியமையாத அம்சமாகும்.[14]

ஒழுங்கு விதிகளை அகற்றும் இவ்வாறான செயன்முறையானது 1977இல் திறந்த பொருளாதாரத்தின் அறிமுகத்துடன் இலங்கையில் ஆரம்பித்தது. கடந்த நான்கு தசாப்தங்களாக இலங்கையில் மூன்று பிரதான அணுகுமுறைகளின் மூலமாக ஒழுங்கு விதிகளை அகற்றல் செயன்முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது:

**1.** தொழிலுக்கு எதிரான முதலாளித்துவத்திற்கு சார்பான சட்டவாக்க மற்றும் கொள்கை இடையீடுகளை அறிமுகப்படுத்துதல்

13. டேவிட் ஹாவே நவதாராளவாதத்தின் சுருக்கமான வரலாறு (Oxford: Oxford University Press, 2006), 76.

14. Ibid.

**2.** புதிய மற்றும் பல்வகைமைமிக்க வகையிலான தொழில் ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல். இது தொழிலாளர் அடையாளத்தினை சிக்கலாக்குவதுடன் அவர்களை நிலையான தவணை ஊழியப் படையிலிருந்து விலக்கி வைக்கிறது (இதன் மூலமாகத் தொழிலாளர்கள் மீதான தொழில் தருநர்களின் பொறுப்பு அகற்றப்படுகிறது)

**3.** தொழிற்சங்க இயக்கத்தின் வலுவினை அகற்றுதல்.[15]

நவதாராளவாதத்தின் கீழ் தொழிற்சந்தைகளின் ஒழுங்குவிதிகளை அகற்றல் எனும் ஒளியிலே நாம் மேலே குறிப்பிட்ட மூன்று தொழில் போராட்டங்களையும் பரிசீலிக்க முடியும் (அவை மூன்றாம் தரப்பு மனிதவலு விநியோக முகவர்களின் மூலம் மனிதவலுவினை வாடகைக்கு அமர்த்தும் நடைமுறை மூலம் உருவானது).

## மூன்று தொழில் போராட்டங்கள்

இலங்கை டெலிகொம் (SLT) வெளிவளம் மூலமாகப் பெறப்பட்ட மனித வளத்தினை 1988 ஆம் ஆண்டுகளிலேயே[16] பயன்படுத்த ஆரம்பித்திருந்தது. ஆரம்ப காலகட்டத்தில் இலங்கை டெலிகொம் தனியார் மனிதவலு முகவர்களிடமிருந்து தொழிலாளர்களை வாடகைக்கு அமர்த்தியது. ஆனால் 2008 ஆம் ஆண்டிலே இலங்கை டெலிகொமிற்குத் தேவையான[17] மனிதவலுவினைக்

---

15. விதுர முணசிங்க, மீள் கற்பனை செய்தல் ‘The Worker’ and Resistance in the Neo-Liberal Era (Colombo: Law & Society Trust, 2018), 12.

16. இலங்கை டெலிகொம் பணிகளில் 100% வீதமானவைகளும் வெளிவளத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. பகுதியளவிலான தொழிற்படையினர் மாத்திரமே மனித வலுவினை விநியோகிக்கும் தனியார் கம்பனிகளிடமிருந்தும் வெளியிலிருந்தும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் இலங்கை டெலிகொம்மினுள் இரண்டு வகையான தொழிலாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். (இலங்கை டெலிகொம் தொழிலாளர்கள் மற்றும் மனிதவலு தொழிலாளர்கள்). அதிகமான சந்தர்ப்பங்களில் இவ்விரண்டு வகையான தொழிலாளர்களுமே இலங்கை டெலிகொம் இல் அவர்கள் ஒரேவிதமான கடமைகளையே புரிகின்றனர். இருப்பினும் இவர்கள் வெவ்வேறு தொழில் வழங்குனர்களினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்

17. குருசிங்க, நேர்காணல் ஆகஸ்ட் 15 2018.

கொள்வளவு செய்கின்ற ஒரே பிரத்தியேக நோக்கத்துக்காக இலங்கை டெலிகொமின் ஒரே துணைநிலைக் கம்பனியாக ஸ்ரீ லங்கா டெலிகொம் மேன்பவர் சொலியூஷன் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் ஸ்ரீ லங்கா டெலிகொம் மேன்பவர் சொலியூஷனது பெயர் ஸ்ரீ லங்கா டெலிகொம் ஹியூமன் கெபிடல் சொலியூஷனென மாற்றப்பட்டு அக்கம்பனியின் 100% உரித்தாண்மையும் இலங்கை டெலிகொமிடம் காணப்பட்டது.[18] இதற்கமைய இலங்கை டெலிகொமிலே இருவகையான தொழிலாளர்கள் காணப்பட்டனர். அதாவது நிரந்தரமான இலங்கை டெலிகொம் தொழிலாளர்கள் (இலங்கை டெலிகொமினால் நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள்), SLT Human Capital Solutions இனால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள். ஆனால் இவ்விரண்டு வகையான தொழிலாளர்களுமே ஒரேவகையான கடமைகளையே நிறைவேற்றினர்.[19] இலங்கை டெலிகொமின் நிரந்தரத் தொழிலாளர்கள் உயர்வான சம்பளத்தினையும் தொழில் பாதுகாப்பினையும் அரச கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏனைய தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மையினையும் பெற்றுக்கொண்ட அதேவேளை மனிதவலுத் தொழிலாளர்கள் (SLT Human Capital Solutions) இனால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள்) அதே கடமைகளை நிறைவேற்றிய போதிலும் இம்மேலதிக நன்மைகள் எவற்றையும் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பதுடன் இலங்கை டெலிகொம் நிரந்தரத் தொழிலாளர்கள்

---

18. இலங்கை டெலிகொம் http://slt.lk, accessed November 11, 2018, http://www.slt.lk/en/about-us/profile/subsidaries.

19. நிரந்தரத் தொழிலாளர்களும் மனிதவலு விநியோகிக்கும் முகவரின் மூலம் வாடகைக்கு விடப்பட்ட தொழிலாளர்களும் இலங்கை டெலிகொமினால் தொழிலுக்கு அமர்த்தப்பட்டு ஒரே வேலைத்தளத்தில் ஒரே மேற்பார்வையாளரின் கீழ் பணிபுரிகின்றனர். இவர்கள் ஒரே பயிற்சியினை பெற்றுக்கொள்கின்றனர். இவர்கள் வேலைக்கு வரும் பொழுதும் வேலை முடிவடைந்து செல்லும் போதும் தமது விரல் அடையாளத்தினை பதிவதற்கு ஒரே இயந்திரத்தினையே பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கிடையில் காணப்படுகின்ற ஒரு வித்தியாசம் ஒரு குழுவினர் மற்றைய குழுவினைவிட குறைவான உரிமைகளையே அனுபவிப்பதாகும்.∵.

பெற்றுக்கொண்ட மாதச் சம்பளத்தின் மூன்றில் ஒரு பங்கினை மாத்திரமே பெற்றுக்கொண்டனர்.[20]

ருகுணு மாகம்புர துறைமுகத்தினைப் பொருத்தளவில் துறைமுகத்தின் ஊழியர்கள் ஆரம்பத்தில் துறைமுக அதிகார சபையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை[21]. ஆனால் துறைமுக அதிகார சபையினால் உருவாக்கப்பட்ட மாகம்புர மேனேஜ்மன்ட் லிமிட்டெட் என அழைக்கப்பட்ட மனிதவலுக் கம்பனியின் மூலமே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். மூன்று வருடகால தகுதிகாண் காலப்பகுதியின் பின்னர் இவர்கள் மாகம்புர மெனேஜ்மென்ட் லிமிட்டெட்டின் நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்படுவார்களென இவர்களது நியமனக் கடிதங்கள் குறிப்பிட்டன. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டிலே[22] புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன்

20. இரண்டு வகைத் தொழிலாளர்களின் சம்பளங்களையும் நன்மைகளையும் ஒப்பிடல் : இலங்கை டெலிகொம் தொழிலாளர் ஒருவர் வருடமொன்றுக்கு 180,000 ரூபா போனஸினை பெற்றுக்கொள்வதற்கும் 320 ரூபா மணித்தியால வேலைநேர கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கும் உரித்தினைக் கொண்டுள்ள அதேவேளை மனிதவலுத் தொழிலாளர் 80,000 ரூபா போனஸினையும் மணித்தியாலத்திற்கு 120 ரூபா மேலதிக வேலைநேர கொடுப்பனவையுமே பெற்றுக்கொள்கின்றார். நிரந்தரத் தொழிலாளர் உணவிற்காகவும் போக்குவரத்துக் கொடுப்பனவிற்காகவும் மாதாந்தம் 14,000 ரூபாவினையும் மருத்துவக் கொடுப்பனவாக 1000 ரூபாவினையும் மருத்துவப் பரிசோதனைக்காக வருடாந்தம் 7000 ரூபாவினையும் பெற்றுக்கொள்கின்றார். அத்துடன் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சலுகை அடிப்படையிலான வீடமைப்புக்கடனை பெற்றுக்கொள்வதற்கும் 40000 ரூபா மோட்டார்வாகன கடனினை பெற்றுக்கொள்வதற்கும் இவர்கள் உரித்தினைக் கொண்டுள்ள போதிலும் இச்சலுகைகள் எவற்றினையும் மனிதவலு தொழிலாளர்கள் பெற்றுக்கொள்வதில்லை.

21. கொழும்புத் துறைமுகத்திலும் இதே நிலைமையே காணப்படுகிறது. இலங்கை டெலிகொம் இல் காணப்படுவதைப் போன்று கொழும்புத் துறைமுகத்திலும் இரண்டு வகையான தொழிலாளர்கள் உள்ளனர். அதாவது அரசாங்க தொழிலாளர்கள் (துறைமுக அதிகாரசபையினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட) அடுத்ததாக தனிப்பட்ட தொழிலாளர்கள் (தனிப்பட்ட மனிதவலு விநியோகக் கம்பனிகளினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டவர்கள்). ருகுணு மாகம்புர துறைமுகத்தில் 100 வீதமான தொழிலாளர்களும் துறைமுக அதிகாரசபையினால் உருவாக்கப்பட்ட துணைக் கம்பனிகளினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டவர்களாவர்.

22. ருகுணு மாகம்புர துறைமுகம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திலே சீன அரசாங்கத்தின் எக்ஸ்போட் இம்போட் வங்கியினால் வழங்கப்பட்ட 370 மில்லியன் ரூபா கடனினைக்கொண்டு நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் ராஜபக்ஷவின் அரசாங்கம் 2015 தேர்தல்களில் தோல்வியைத் தழுவியது.

பின்னர் ருகுணு மாகம்புர துறைமுகத்தினை இலங்கை அரசாங்கம் 99 வருட குத்தகைக்காக[23] சீனாவுக்கு வழங்கப்போவதைத் தொழிலாளர்கள் அறிந்து கொண்டனர். 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலேயே ஊழியர்கள் இதனைத் தெரிந்துகொண்டனர். தாம் துறைமுக அதிகார சபையினால் நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படாமல் மாகம்புர மெனேஜ்மன்ட் லிமிட்டெட் எனும் மனிதவலு முகவரினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதனால் தமது தொழில் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுவதை உணர்ந்த தொழிலாளர்கள் பதற்றமடையத் தொடங்கினர்[24]

இலங்கை டெலிகொம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நிறுவனமாக இருக்கின்ற அதேவேளை ருகுணு மாகம்புர துறைமுகம் ஓர் அரசாங்க நிறுவனமாகும். மேலும் அசோசியேடட் பெட்டெரி மெனுபெக்சரர்ஸ் இந்திய உரித்தாண்மையின் கீழான ஒரு தனியார் கம்பனியாகும். கடந்த 6 முதல் 7 வருடங்களாக இக்கம்பனியும் கிரமமான நிரந்தரத் தொழிலாளர்களுக்கு மேலதிகமாக மூன்றாம் தரப்பு மனிதவலு விநியோக முகவர்கள் மூலமாக ஆட்சேர்ப்புச் செய்யும் முறையினைப் பின்பற்றி வருகின்றது. ஆபத்தான மற்றும் கடினமான வேலைகள் மனிதவலுத் தொழிலாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன், இவர்களுக்கே நீண்டவேலை நேரங்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் அதிகமான இரவுநேர முறைமாற்றுக் கடமைகளும் இவர்களுக்கே வழங்கப்படுகின்றன. இருப்பினும் இவர்களுக்கு ஒப்பீட்டளவிலே மிகக்குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது[25].

---

23. ருகுணு மாகம்புர துறைமுகத்தினை சீனாவிற்கு கையளிக்கப்போவதாக 2016 நடுப்பகுதியில் வதந்திகள் வரத்தொடங்கின. 2017 டிசம்பர் 9 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் துறைமுகத்தினை சீன மேர்சன்ட் போட் ஹோல்டிங் கம்பனிக்கும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இடையிலான கூட்டுமுயற்சிக்காக 99 வருட குத்தகைக்கு வழங்கியது. இந்த உடன்படிக்கைக்கு அமைவாக சீன மேர்சன்ட் போட் ஹோல்டிங் கம்பனி கூட்டு முயற்சியின் 85% இனையும் இலங்கை துறைமுக அதிகாரசபை 15% இனையும் உரிமையாக கொண்டிருக்கும்.

24. சாகர, நேர்காணல், ஜூலை 22 2018.

25. Ibid.

## ஆபத்தான ஊழியமும் தொழிலாளர் போராட்டங்களும்

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை டெலிகொம் சொலியூஷன் தொழிலாளர்கள் தாம் நேரடியாக இலங்கை டெலிகொமுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டுமெனக் கோரிவருகின்றனர். 2016 டிசெம்பர் மாதத்திலே இத்தொழிலாளர்கள் வேலைநிறுத்த நடவடிக்கையில் இறங்கியதுடன் அது மூன்று மாதங்களுக்கும் மேல் நீடித்தது. 1200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இவ்வேலை நிறுத்த நடவடிக்கையில் முனைப்புடன் ஈடுபட்டனர்[26]. 2016 டிசெம்பரிலே ருகுணு மாகம்புர மெனேஜ்மன்ட் லிமிடட் தொழிலாளர்கள் சத்தியாக்கிரக செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.[27] இவர்கள் தாம் துறைமுக அதிகார சபைக்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். இச்சத்தியாக்கிரக நடவடிக்கை பின்னர் வேலைநிறுத்த நடவடிக்கையாக மாறியது. தமது தொழிற்சங்க நடவடிக்கையின்போது இத்தாழிலாளர்கள் துறைமுகத்திலிருந்து இரண்டு கப்பல்களைச் செல்லவிடாமல் தடுத்து வைத்திருந்ததன் காரணத்தினால் இலங்கை கடற்படையினர் நிலைமையினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பலத்தினைப் பிரயோகிக்க வேண்டியேற்பட்டது. இச்சூழ்நிலையை சமாளிப்பதற்கு அவர்கள் தொழிலாளர்களின் நடவடிக்கையினை கடற்கொள்ளையர்களின் நடவடிக்கையென[28] சித்தரித்திருந்தனர். இதேபோன்று அசோசியேடெட் பெட்டரி மெனுபெக்சரரின் தொழிலாளர்களும் தாம் தொழிற்சாலைக்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டுமெனக் கோரி தமது வேலைநிறுத்தத்தை முன்னெடுத்தனர்[29].

26. குருசிங்க, நேர்காணல் ஆகஸ்ட் 15 2018.

27. சத்தியாகிரகம் என்பது மகாத்மா காந்தியினால் உருவாக்கப்பட்ட அகிம்சை முறையிலான எதிர்ப்பு இயக்கமாகும். இது பல சுதந்திர இயக்கங்களிலும் சிவில் உரிமை இயக்கங்களிலும் பிரபலமாகியுள்ளது.

28. ஹம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் தொடர்ந்தும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். ”Newsfirst.lk, accessed October 6, 2018, https://www.newsfirst.lk/2016/12/09/hambantota-port-employees-continue-strike-action/

29. லீனஸ் ஜெயதிலக்க, நேர்காணல் ஜூலை 15 2018.

இத்தொழிற்சங்க நடவடிக்கையின் ஒட்டுமொத்தக் காலப்பகுதி முழுவதிலும் இத்தொழிலாளர்கள் முகம்கொடுத்த சவால்கள் மனிதவலு ஊழியத்தின் ஆபத்தான தன்மையினைத் தெளிவாக எடுத்து விளக்கின. தொழிலாளர்கள் மனிதவலு முகவர்களின் மூலமாக வாடகைக்கு அமர்த்தப்படும்போது தமது உரிமைகளை அவர்கள் மனிதவலு முகவரிடமே கோரவேண்டி இருக்கிறது. அதேவேளை எந்தக் கம்பனிக்கு அவர்கள் உண்மையிலேயே தமது ஊழியத்தை வழங்குகின்றார்களோ அக்கம்பனி இவர்கள் தொடர்பில் எவ்வித பொறுப்பும் அற்றதாகக் காணப்படுகிறது. இதற்கமைய இம்மூன்று கம்பனிகளான இலங்கை டெலிகொம், மாகம்புர துறைமுகம் மற்றும் அசோசியேடட் பெட்டரி மெனுபெக்சரஸ் ஆகியன தொழிலுக்கு அமர்த்தியுள்ள மனிதவலுத் தொழிலாளர்கள் தம்மை ஆட்சேர்ப்புச் செய்துள்ள மனிதவலு விநியோக முகவர்களின் முகாமைத்துவத்துடன் நிலைமைகளைச் சமாளிக்கவேண்டி இருக்கின்றதேயன்றி அவர்கள் எதற்காகத் தொழிலுக்கு அமர்த்தப்பட்டார்களோ அந்த முகாமைத்துவத்துடன் அல்ல. அவைதான் அரசாங்கத்தின் பகுதியான கட்டுப்பாட்டில் உள்ள அதிகார சபைகளாக உள்ளன. தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்போது அவர்களின் தொழில்தள முகாமைத்துவம் அவர்களிடம் ‘உங்கள் தொடர்பில் எங்களுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை’ என்று கூறி விடயத்தை மனிதவலு முகவருக்கு மாற்றிவிடுகின்றனர். இறுதியில் இது ஊழியர்கள் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு இட்டுச் செல்கின்றது. தமது தொழில் வழங்குநரின் துணைநிலைக் கம்பனிகளான எஸ்எல்டீ சொலியூஷன்ஸ் அல்லது மாகம்புர மெனேஜ்மென்ட் லிமிட்டெட் போன்ற மனிதவலு முகவர்களின் மூலம் தமது தொழில் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யுமாறு ஊழியர் ஒருவர் கோரிக்கை விடுக்கும்போது தாய்க் கம்பனியானது துணைநிலைக் கம்பனியினை (தனியான சட்ட

அமைப்பு) மூடிவிடுவதன் மூலமாக அனைத்து ஊழியர்களினதும் சேவையினை முடிவுறுத்த முடியும். இதனைத் தாய்க் கம்பனி தனது இருப்பிற்கு எந்தவிதமான பாதகமான தாக்கமும் ஏற்படாத வகையில் நிறைவேற்றுகிறது. ஆபத்தான தொழில் நிலைகள் அடிபணிந்த தொழிலாளர்களை உருவாக்குகிறது என்பது நன்கறியப்பட்ட உண்மையாகும். இவர்கள் கடுமையான மற்றும் மிகவும் நியாயமற்ற தொழில் நிலைமைகளைச் சகித்துக் கொண்டு தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர். இந்த ஆபத்தான தொழில் ஏற்பாடுகளில் காணப்படுகின்ற தொழில் பாதுகாப்பின்மையானது தொழிலாளர்களது உரிமைகளுக்காகப் போராடும்போது தீர்மானகரமாண காரணியாக மாறுகின்றது. இலங்கை டெலிகொம் மனிதவலுத் தொழிலாளர்கள் தமது போராட்டத்தினை ஆரம்பித்தபோது அவர்கள் இந்த அனைத்து சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

2011 ஆம் ஆண்டிலே ஸ்ரீலங்கா டெலிகொம் இல் நிரந்தரத் தொழிலாளர்களும் மனிதவலுத் தொழிலாளர்களும் தமது சம்பளத்திளை அதிகரிக்குமாறும் தொழில்களை நிரந்தரமாக்குமாறும் கோரி 10 நாட்களுக்கு மேல் நீடித்த வேலைநிறுத்த நடவடிக்கையை மேற்கொண்டனர். எவ்வாறாயினும் இக்கோரிக்கைகளில் அதிகமானவற்றினை நிரந்தரத் தொழிலாளர்களினால் மாத்திரமே நிறைவேற்றிக்கொள்ளக் கூடியதாயிருந்த அதேவேளை மனிதவலுத் தொழிலாளர்களுக்கு அற்பமான சம்பள அதிகரிப்பே வழங்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் மற்றும் ஸ்ரீ லங்கா டெலிகொமின் பிரச்சினை தொடர்பாகப் பாராளுமன்றத்தில் பிரதமர் 2016 ஆம் ஆண்டில் ஆற்றிய உரை ஆகியன ஏழு வருடங்கள் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த மனிதவலுத் தொழிலாளர்களை இலங்கை டெலிகொமின் பதவிநிலையினுள் உள்வாங்குவதற்கான ஆர்வத்தினை வெளிப்படுத்தியபோதிலும்

அது ஒருபோதுமே அமுல்படுத்தப்படவில்லை.[30] அரசாங்கத்தின் தரப்பில் இந்தச் செயற்பாடின்மையானது ஸ்ரீலங்கா டெலிகொமிலே தமது தொழில்களை நிரந்தரமாக்குவதற்குத் தேவையான இத்தகைமையினை (NVQ Level 4[31]) மனிதவலுத் தொழிலாளர்களில் பெரும்பாண்மையானோர் பூர்த்திசெய்திருந்த சூழமைவிலேயே நிகழ்ந்தது. நிரந்தரத் தொழிலாளர்கள் மனிதவலுத் தொழிலாளர்கள் ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கையில் பங்குபற்றவில்லை. நிரந்தரப் பதவியணிக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தாம் ஏற்கனவே அனுபவிக்கும்[32] சிறப்புரிமைகளையும் நன்மைகளையும் பாதித்துவிடும் என்ற அச்சத்தினாலேயே அவர்கள் பங்குபற்றவில்லை. தொழிற்படையினைப் பிரிப்பதற்கு இந்த அச்சமே நிரந்தரத் தொழிலாளர்களின் மத்தியில் முகாமைத்துவத்தினால் தொடர்ச்சியாகப் பரப்பப்பட்டு வந்தது[33].

ருகுணு மாகம்புர துறைமுகத்தில் மாகம்புர மெனேஜ்மன்ட் லிமிடடினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்கள் மூன்று வருட தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் மாத்திரமே நிரந்தரமாக ஆக்கப்படுவார்கள் என்ற நிபந்தனையிலேயே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர். அவர்கள் மூன்று வருட காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவில்லை. மாறாக சத்தியாக்கிரகத்தில் அவர்களது பெற்றோர்களே கலந்துக் கொண்டனர்[34]. சத்தியாக்கிரகம் நடைபெற்ற போது அவர்கள் மூன்று வருட சேவையினைப் பூர்த்திசெய்த காரணத்தினால் அவர்களும்

30. NVQ (தேசிய தொழிற்கல்வித் தகைமை) என்பது தேசிய ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி கல்விச் சட்டகமாகும். (தேசிய தொழிற்கல்வித் தகைமை) NVQ மட்டம் 4 தேசியமட்டம் கைவினைஞருக்கான தேசிய மட்டத்தில் உள்ளதாக கருதப்படுகின்றது. (http://www.tvec.gov.lk/?page_id=140)

31. குருசிங்க, நேர்காணல் ஆகஸ்ட் 15, 2018.

32. எஸ். ராஜபக்ஷ, நேர்காணல், மே 22,2018.

33. எஸ். ராஜபக்ஷ, நேர்காணல், மே 22, 2018.

34. சாகர, நேர்காணல், ஜூலை 22, 2018.

போராட்டத்திலே இணைந்துக் கொண்டனர். வேலைநிறுத்தத்தின் நான்காம் நாளன்று, அடுத்த நாள் பிற்பகல் இரண்டு மணியளவில் வேலைக்குத் திரும்பாத எந்தவொரு ஊழியரும் பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுவார் என்கின்ற காலக்கெடுவினை விதித்ததன் மூலம் முகாமைத்துவம் பதிற்செயற்பாடாற்றியது. அசோசியேடட் பெட்டரி மனுபெக்சரரின் முகாமைத்துவம் எடுத்த முதலாவது நடவடிக்கை சங்கத்தின் பிரதான அமைப்பாளரையும் பொருளாளரையும்[35] சேவையிலிருந்து நீக்கியமையாகும்.

## தொழிலாளர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட சக்தியா அல்லது அரசியல் தொடர்பா?

அரசியல் லாபம் தேடுவதற்காக அரசியல்வாதிகள் எவ்வாறு மனிதவலுத் தொழிலாளர்களின் ஆபத்தான நிலையினைச் சூழ்ச்சித் திறனுடன் பயன்படுத்த முயற்சிக்கின்றனர் என்பதை அவதானிப்பது சுவாரஸ்யமானதாகும் (குறிப்பாக இலங்கை டெலிகொம் மற்றும் மாகம்புர துறைமுக விடயங்களில்). ஆப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கத்திற்கு தொடர்ச்சியான ஆதரவினை உறுதிப்படுத்துவதற்கான ஓர் உபாய மார்க்க நடவடிக்கையாக மாகம்புர மனேஜ்மென்ட் லிமிடட் மக்களுக்கு இத்தொழில் வாய்ப்புக்களை வழங்கியது. அரசாங்கம் பதவியில் தொடர்ந்து இருக்காவிட்டால் தமது தொழில் நிரந்தரமானதல்ல என்பதை தொழில் வாய்ப்பினை ஏற்றுக்கொண்ட தொழிலாளர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் மனிதவலுக் கம்பனியின் தொழிலாளர்களாக இருந்த காரணத்தினால் துறைமுக அதிகார சபையினால் எந்நேரத்திலும் மனிதவலுக் கம்பனியினை மூடிவிட முடியும். இதனைத் தடுத்து தமது தொழிலைப் பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்ந்தும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திற்கு

35. அமரசிங்க, நேர்காணல், ஜூலை 12, 2018.

ஆதரவு வழங்குவார்கள் என்பது தெளிவானதாகும்[36] டெலிகொம் சொலுசனுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அதிகமானவர்கள் குறிப்பிட்ட அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்கள் என்றும் அக்காரணத்தினால் அக்கட்சியின் அரசியல்வாதிகளுக்கும் மனிதவலுத் தொழிலாளர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்றும் பலரும் நம்புகின்றனர்[37] இக்காரணத்தினால் தமது உரிமைகளுக்காகத் தொழிலாளர் இயக்கங்களின் அங்கமாகி கூட்டாகப் போராடுவதற்குப் பதிலாக தமது குறைகளை வெளிப்படுத்த அரசியல்வாதிகளையே அதிகம் நாடுவதற்கு எத்தனிக்கின்றனர்.

தொழில் அமைச்சர் பிரச்சினையினை கட்டாய நடுவர் தீர்ப்பிற்கு[38] ஆற்றுப்படுத்திய காரணத்தினால் மாகம்புர துறைமுகத் தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை நிறுத்தவேண்டி ஏற்பட்டது. கட்டாய நடுவர் தீர்ப்புச் செயன்முறை எவ்வித முன்னேற்றத்தினையும் அடையமுன்னர் அரசியலில் தீவிர ஈடுபாடுகொண்ட மேலும் பல்வேறு அமைச்சர்களுடன் தொடர்பினைக் கொண்ட பிக்குகளின் தலையீட்டினைக் கொண்டு அதிகாரிகள் தமக்கு வசதியான தீர்விற்குத் தொழிலாளர்களை இணங்கச்செய்வதில் வெற்றிக்கண்டனர். இறுதியாக NVQ 4 தகைமையினைக் கொண்டவர்கள் நிரந்தரச் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு அனுமதித்த தொழிலாளர்கள் ஏனையோருக்கு 1 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்வதற்கும் இணங்கினர். இத்தீர்மானத்திற்கு

36. சாகர, நேர்காணல், ஜூலை 22, 2018.

37. குருசிங்க, நேர்காணல் ஆகஸ்ட் 15, 2018.

38. கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் நான்காம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சர் பிணக்கொன்றினை தீர்ப்பதற்காக அதனை கட்டாய நடுவர் தீர்ப்பிற்கோ அல்லது பிணக்கினை தீர்க்க கைத்தொழில் நீதிமன்றத்திற்கு பிணக்கினை ஆற்றுப்படுத்தலாம். (1950ம் ஆண்டின் 53ம் இலக்கச் சட்டம்)

தொழிலாளர்களும் அதிகாரிகளும் இணங்கிய பின்னர் கட்டாய நடுவர் தீர்ப்புச் செயன்முறை இனிமேலும் தேவைப்படவில்லை. ருகுணு மாகம்புர துறைமுக மனிதவலுத் தொழிலாளர் போராட்டத்தினை இது முடிவுக்குக் கொண்டு வந்தது.

இதே காலகட்டத்தில்[39] நாட்டில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டன[40] தொழிற்சங்கச் செயலாளர் இலங்கை பொதுஜன பெரமுனவினைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டார். இதனால் அவர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது பாதிக்கப்பட்டது. தொழிலாளர்களை ஒழுங்கமைக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்த ஏனையோர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினைச் (UPFA) சேர்ந்த அமைச்சர் ஒருவரின் தீவிர ஆதரவாளர்களாக மாறினர். நிரந்தரப் பதவிகளை வழங்குவதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட தெரிவு அடிப்படையாக NVQ 4 அமைந்திருந்த போதிலும் சகல சந்தர்ப்பங்களிலும் அது சமச்சீராகப் பின்பற்றப்படவில்லை. நிரந்தரப் பதவிகள் வழங்கப்பட்ட கிட்டத்தட்ட அனைவருமே களுத்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர் களுத்துறை மாவட்டம்[40] நிரந்தரத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டது. அதேவேளை ஹம்பாந்தோட்டையினைச் சேர்ந்த தொழிலாளர்களில் 95 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. இப்பிரதேசங்களில் இரண்டில் ஒன்றினைச் சேர்ந்த தொழிலாளர் ஒருவர் தனது தொழிலைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றால் அவர் களுத்துறை மாவட்டத்தினைச் சேர்ந்த, அப்போது தொழில் திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆதரவாளராக அல்லது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தினைச் சேர்ந்த ஐக்கிய

39. 2017 நவம்பர் 15 இல் இருந்து டிசம்பர் 18 வரையில் உள்ளூராட்சித் தேர்தல்களுக்காக இலங்கையில் வேட்புமனுக்கள கோரப்பட்டு 2018 பெப்ரவரி 10 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

40. Ibid.

மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினைச் சேர்ந்த மிகவும் சக்தி வாய்ந்த அமைச்சர் ஒருவரின் ஆதரவாளராக மாறவேண்டும். டெலிகொம் மனிதவலுத் தொழிலாளர்களின் விடயத்திலும் தொழிலாளர்களுடன் அரசியல்வாதிகள் கொண்டிருந்த பல்வேறு வகையான தொடர்புகளின் அடிப்படையில் அவர்கள் பல தலையீடுகளை மேற்கொண்டனர். ஒரு சந்தர்ப்பத்தில் அரசியல்வாதி ஒருவர் தான் அரசாங்கத்தில்[41] மிகவும் சக்திவாய்ந்த மூன்றாவது நபராக இருக்கின்ற காரணத்தினால் இவ்விடயத்தினைத் தீர்க்கக்கூடிய நிலையில்தான் இருப்பதாகப் பகிரங்கமாகக் குறிப்பிட்டார். இருந்தபோதிலும் டெலிகொம் வேலைநிறுத்தம் மிகவும் நகர்ப்புறம் சார்ந்த ஒரு சூழமைவில் அணிதிரட்டப்பட்டு மிகவும் சுயாதீனமான போராட்ட வடிவினை எடுத்து பல இடையீடுகளின்[42] காரணமாக மிகவும் உறுதியானதாக மாறியது. 87 நாட்கள் வேலைநிறுத்தம் பின்னர் உண்ணாவிரதப் போராட்டமாக மாறியது. பிரச்சினையினைத் தொழில் அமைச்சர் கட்டாய நடுவர் தீர்ப்பிற்கு ஆற்றுப்படுத்தியதும் போராட்டத்தினை முடிக்கவேண்டி நேரிட்டது. இந்நகர்வுடன் போராட்டத்தின் தீவிரம் குறைவடைந்து பின்னர் சுமார் 400 தொழிலாளர்கள் நிரந்தரப் பதவியணியினுள் சேர்க்கப்பட்டனர். சிறிலங்கா டெலிகொம் தொழிலாளர்களுக்கு நியமனக் கடிதம் வழங்குவதை ஒரு வைபவமாக ஏற்பாடு செய்தது. இச்செயற்பாட்டினை ஒரு பரோஉபகாரச்[43] செயற்பாடாகச் சித்தரித்து அதில் அரசியல்வாதிகள் பங்குபற்றினர். அசோசியேடட் பெட்டரி மெனுபக்சரரின் தொழிலாளர்களின் வேலைநிறுத்த நடவடிக்கை 9 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. அனைத்து மனிதவலுத் தொழிலாளர்களும் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதும் இது முடிவுக்கு வந்தது. இலங்கை டெலிகொம்

41. குருசிங்க, நேர்காணல் ஆகஸ்ட் 15, 2018.

42. பிரபலாமான தொழிற்சங்கத் தலைவர்கள், பல்வேறு சிவில் சமூக நிறுவனங்கள் டெலிகொம் போராட்டத்தில் தீவிர ஆதரவினை வழங்கின

43. எல். ஹேமசந்திர, நேர்காணல், ஜீலை 3, 2018

நிலைமையினைப் போலல்லாது இதில் நிரந்தரத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் இணைந்துகொண்டு மனிதவலுத் தொழிலாளர்களுக்கு ஒற்றுமையினை வெளிப்படுத்தினர். வேலை நிறுத்தத்தின் பின்னர் மனிதவலுத் தொழிலாளர்கள் சிறு சிறு குழுக்களாக நிரந்தரச் சேவைக்கு காலத்திற்குக் காலம் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எவ்வாறாயினும் அவர்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்ட நாட்கள் கொடுப்பனவற்ற விடுப்பாகக் கருதப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட வருடத்திற்கான அவர்களின் சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவும் இடைநிறுத்திவைக்கப்பட்டது[44] இவ்வத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள இம்மூன்று போராட்டங்களிலும் மனிதவலு முகவர்களினைப் பயன்படுத்துவதால் உருவாக்கப்பட்ட தொழிலின் ஆபத்தான தன்மை நன்கு புலப்படுகிறது. இதன் விளைவாக, மனிதவலுத் தொழில் ஏற்பாடுகளின் கீழ் தொழிலாளர்கள் அரசியலற்ற, இயைபாக்கப்பட்ட, எப்போதும் அரசியல் போஷிப்பில் தங்கியுள்ள அரசியல்வாதிகளாக மாறினர். இம்மூன்று போராட்டங்களிலும் பங்குபற்றிய மூன்று செயற்பாட்டாளர்கள் அவர்களின் அதிருப்தியினைப் பின்வருமாறு வெளிப்படுத்தினர்:

> ‘நாங்கள் ஏற்பாடு செய்தது தொழிலாளர் போராட்டத்தினையே. ஆனால் இறுதியில் எமக்கு அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல வேண்டிய நிலையேற்பட்டது - **மாகம்புர துறைமுக தொழிற்சங்கத் தலைவர்.**

> ‘நாம் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினோம். ஆனால் இது நாங்கள் பெற்ற வெற்றியல்ல அரசியல்வாதிகள் அளித்த பரிசு என சிலர் நினைக்கின்றனர் - **டெலிகொம் மனித வலுப் போராட்டத்தில் பங்குபற்றிய பெண் செயற்பாட்டாளர்**

---

44. அமரசிங்க, நேர்காணல், ஜீலை 12, 2018

'மனிதவலுத் தொழிலாளர்கள் சிலர் தொழிலை இழந்த போதிலும் சிலர் தமது தொழிலில் நிரந்தரமாக்கப்பட்டனர். தொழிலாளர்களின் மன அழுத்தத்தினை ஓரளவிற்காவது நிவர்த்தி செய்தமை ஓர் அடைவு எனத் தொழிலாளர்கள் நம்புகின்றனர் - **அசோசியேடட் பெற்றரி மெனுபக்சரர் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றிய தாய்ச் சங்கத் தலைவர்.**

## நவதாராளவாதம் மற்றும் பழைய ஆட்சியதிகாரவாதம்

நவதாராளவாதத்தினால் புதிய வடிவிலான முதலாளித்துவ தொழில் உறவு (மூன்றாம் தரப்பு மனிதவலு விநியோக முகவர்களின் மூலம் மனிதவலுவினை வாடகைக்கு அமர்த்தல்) உருவாக்கப்பட்டுள்ளது என்பதுவும் நெகிழ்வுத் தன்மைமிக்க தொழிலையும் ஒழுங்கு விதிகளை அகற்றுதலையும் ஊக்குவிப்பதும் தொழிலை மிகவும் பாதிப்புறு நிலையுடையதாக ஆக்கியுள்ளது என்பது தெளிவான விடயமாகும். தொழிற்சங்கம் இப்போது ஊனமுற்று, சக்தியிழந்துள்ள காரணத்தினால் ஆளும் கட்சிகள் தமது நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தொழிலினைச் சூழ்ச்சித் திறனுடன் கையாள்வது இலகுவாகியுள்ளது. மொத்தத்தில் நாட்டில் எஞ்சியிருந்த தொழிலாளர் உரிமைகள் மற்றும் பிரசைகளின் சனநாயக உரிமைகளின் தடங்கள் நவதாராளவாதப் பொருளாதாரத்தினால் கீழறுக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டுள்ளன. அல்ஸ்டன் கூறுவது போல, அது இயங்குகின்ற வழியின் காரணமாக நவதாராளவாதம் ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு நிகழ்வாகும்.

'நவதாராளவாதப் பார்வையில் பொதுமக்கள் ஜனநாயகம் என்பது குண்டர் ஆட்சிக்கு சமமாக்கப்பட்டிருக்கிறது. இது வகைமாதிரியாக மூலதனத் திரட்டலுக்கான சகல தடைகளையும் உருவாக்குகிறது. இதனால் 1970 களில் மேல் வகுப்பு மக்களின் அதிகாரத்தின் அச்சுறுத்தலாக இருந்தது. விருப்பத்துக்குரிய ஆளுகை வடிவமாக அரச

> தனியார் பங்காண்மை காணப்படுகிறது. இதில் அரசும் பிரதான வியாபார அக்கறைகளும் நெருக்கமாக ஒத்துழைத்து அதன்மூலம் மூலதனத் திரட்டலை அதிகரிப்பதற்கான தமது செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்றன. இதன் விளைவாகக் ஒழுங்குபடுத்தப்பட்டவர்கள் ஒழுங்கு விதிகளின் விதிகளை எழுதும் நிலை ஏற்படுகிறது. அதேவேளை பொதுமக்கள் கருத்து வேறுபாடு புலப்படாததாக ஆகின்றது[45]

எனவே, நவதாராளவாத ஒழுங்கின் கீழ், மத்திய வங்கியினையும் அரசிறை அதிகாரத்தினையும் கட்டுப்படுத்தும் சக்திமிக்கதும் அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ளதுமான அமைப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. அதேவேளை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச வர்த்தக சங்கங்கள் ஆகியன இவ்வமைப்புக்களின் மீது கட்டுப்பாட்டினைச் செலுத்துவதற்காக சர்வதேச மட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன. சக்திமிக்க இந்த அமைப்புக்கள் யாவும் சனநாயகக் கட்டுப்பாடு மற்றும் மக்களின் மேற்பார்வை[46] ஆகியவற்றின் தளத்திற்கு அப்பாலேயே காணப்படுகின்றன. சொல்லாடலில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ள மனித உரிமைகளுக்கு எதிரான தற்கால வெகுஜன அரசியல்வாதிகளின் கருத்துக்களை இச்சூழமைவிலேயே நாம் புரிந்து கொள்ளவேண்டும். தேசிய பாதுகாப்பு, இறைமை மற்றும் பொருளாதார தேசியவாதம் ஆகியன தொடர்பாக மனித உரிமைகளுககு எதிராக எழுப்பப்படும் வாதங்கள் வகைப்பொறுப்போ அல்லது ஜனநாயகமோ அற்ற பொருளாதார முறைமை ஒன்றின் இயக்கத்தினை சட்டபூர்வமானதாக ஆக்குவதற்கான சித்தாந்த

---

45. டேவிட் ஹார்வே, Neoliberalism and Restoration of class power, accessed September 22, 2018, https://gsnas.files.wordpress.com/2007/10/harvey080604.pdf.

46. பிலிப் அல்ஸ்டன். “The Populist Challenge to Human Rights.” Journal of Human Rights Practice, Volume 9, Issue 1, (2017): 1–15.

ரீதியிலான ஒரு முன்னனியாகும். இந்த ஆய்வின் விடயப் பொருளாக இருக்கும் தொழிலாளர் போராட்டங்களுக்கு எதிராக எழுப்பப்படும் வாதங்களை உன்னிப்பாக அவதானித்தால், தேசிய பாதுகாப்பு, இறைமை மற்றும் பொருளாதாரத் தேசியவாதம் ஆகியவற்றின் சொல்லாடல் போராட்டங்களை நசுக்குவதற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது தெளிவாகத் தெரியவரும். இலங்கை டெலிகொம் மற்றும் டெலிகொம் மனிதவலுத் தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுத்தபோது அந்நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துகின்றன என்றும் அதனால் அவை நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளைச் சேதப்படுத்துகின்றன[47] என்றும் காட்டியே அவற்றுக்கெதிரான கட்டளைகள் நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்டன. இதேபோன்ற மற்றுமொரு சம்பவத்தில் தொழிற்சங்க நடவடிக்கைக்குப் பின்னாலுள்ள குறிக்கோள் இலங்கை டெலிகொமினது இயக்கங்களுக்கு இடையூறு விளைவிப்பதற்காக அதன் செயற்பாடுகளைக் குழப்புவதற்காக[48] என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. மற்றுமொரு சந்தர்ப்பத்தில், குற்றவியல் தண்டனைக் கோவையின் 106(3) ஆம் பிரிவின்[49] கீழ் நீதவான் நீதிமன்றத்திலிருந்து தடையுத்தரவைப் பெற்ற பின்னரும் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனக்கூறி இலங்கை டெலிகொம் இலங்கைப் பொலிசுக்கு எதிராக நீதிமன்றக் கட்டளை மனுவினைச் சமர்ப்பித்தது. டெலிகொம் மனிதவலுப் போராட்டத்தின் போது அரசாங்கத்தினால் நீதிமன்ற வழக்குகளிலும் ஊடகச் சந்திப்புக்களிலும் மீண்டும் மீண்டும் கூறப்பட்டது என்னவெனில் தொழிலாளர்கள் நாசகார வேலைகளில்

47. கொழும்பு நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம். B 4132/16.

48. கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம். 3/2017/DSP.

49. “Sri Lanka Telecom files a writ petition against Police inaction over manpower employees”, accessed October 20, 2018, http://www.dailynews.lk/2017/03/24/law-order/111439/sri-lanka-telecom-files-writ-petition-against-police-inaction-over.

ஈடுபட்டுள்ளனர் என்பதுவும் அவர்கள் இலங்கை டெலிகொம் சொத்தினைச்[50] சேதப்படுத்துகின்றனர் என்பதுமாகும். பல சந்தர்ப்பங்களில் அரசாங்க அதிகாரிகள் தொழிலாளர்கள் குண்டர் குழுக்களைப் போன்று நடந்துகொள்வதாகக் குற்றஞ்சாட்டினர். மாகம்புர துறைமுகத் தொழிலாளர்கள் இரண்டு கப்பல்களைத் துறைமுகத்திலிருந்து செல்லவிடாது தடுத்து வைத்திருந்தபோது அச்சூழ்நிலை கடற்கொள்ளைக்கு ஒப்பானது என்றும் அவ்வாறான சந்தர்ப்பத்தில்[51] அதில் தலையிடுவதற்கான நியாயாதிக்கம் தனக்கு உள்ளதென்று கூறி கடற்படை அதில் தலையிட்டது. இது தொடர்பாகப் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ச்சியான பொருளாதார இழப்புக்[52] காரணமாக அச்சூழ்நிலை தேசிய பொருளாதாரத்தின் மீது பாரிய சுமையினைச் சுமத்துவதாகக் குறிப்பிட்டார். பாதுகாப்புப் பிரதி அமைச்சரான ருவன் விஜேவர்தன கடற்படையின் தலையீட்டினை நியாயப்படுத்தி துறைமுகத் தொழிலாளர்களை இனிமேலும் தொழிலாளர்களாகக் கருத முடியாது என்றும் அவர்களைக் கடற்கொள்ளையர்கள்[53] என்றே கருத வேண்டுமெனக் குறிப்பிட்டார். இந்த அனைத்து வாதங்களின் மூலமும் வலுப்படுத்தப்பட்ட கருத்து என்னவென்றால், உரிமைப் போராட்டங்கள் தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய பொருளாதாரத்தில் பாரதூரமான விளைவினை ஏற்படுத்துகின்றன என்பதேயாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆபத்து ஏற்படுகையில்

---

50. "Enjoying order against SLT trade union protests", accessed October 18, 2018, http://www.sundayobserver.lk/2017/01/15/business/enjoining-order-against-slt-trade-union-protests?page=1

51. "Sri Lanka Navy breaks up protests at Hambanthota Port," https://worldmeritimenews.com, accessed November 16, 2018, https://worldmaritimenews.com/archives/208445/sri-lanka-navy-breaks-up-protests-at-hambantota-port/

52. "What happened in Hambanthota," Roar.media, accessed October 7, 2018, https://roar.media/english/life/reports/what-happened-in-magampura/

53. "Attack on Hambanthota port workers: state minister rejects allegations," Sundayobserver.lk, accessed October 6, 2018, http://www.sundayobserver.lk/2016/12/11/news/attack-hambantota-port-workers-state-minister-rejects-allegations

மனித உரிமைகள் மீறப்படலாம் என்பதேயாகும். இந்த ஆய்வுக் கட்டுரை எழுதப்படுகையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான சட்டமூலமும் அதே வாதங்களின் அடிப்படையில் மனித உரிமைகளுக்கு சவால் விடுக்கின்றது.[54]

இச்சட்டமூலத்தில், பயங்கரவாதம் எனும் குற்றச்செயல் பின்வருமாறு பரந்த அளவில் வரையறை செய்யப்படுகிறது: மக்களை அச்சுறுத்தும் நோக்கத்துடன் இலங்கை அரசாங்கத்தினை அல்லது வேறு ஓர் அரசாங்கத்தினை அல்லது சர்வதேச நிறுவனம் ஒன்றினை எந்தவொரு செயலினையும் செய்யுமாறு அல்லது செய்வதிலிருந்தும் தவிர்ந்திருக்குமாறு தவறாக அல்லது சட்டவிரோதமாக வற்புறுத்துதல் அல்லது அவ்வாறான அரசாங்கத்தினைச் செயற்படுவதிலிருந்து தடுத்தல் அல்லது இலங்கை அல்லது வேறு ஏதாவது இறைமையுள்ள நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு அல்லது இறைமைக்கு பின்வருமாறு தீங்கினை ஏற்படுத்துதல்:

> அரச அல்லது தனியார் சொத்து, எவ்வகையானதும் பொதுப்பயன்பாட்டிடம், அரசு அல்லது அரசாங்க வசதி, ஏதாவது அரச அல்லது தனியார் போக்குவரத்து முறைமை அல்லது ஏதாவது உட்கட்டமைப்பு வசதி அல்லது சுற்றாடல் உள்ளிட்ட சொத்திற்கு பாரதூரமான சேதத்தினை ஏற்படுத்துதல்
>
> அத்தியாவசிய சேவைகள் அல்லது விநியோகங்களுக்குப் பாரதூரமான தடையினை அல்லது சேதத்தினை ஏற்படுத்துதல்

54. 2018 ஒக்டோபர் 9ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலத்திற்கு சவால் விடுத்து வெவ்வேறு தரப்பினர் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். "Counter Terrorism Bill Challenged in SC", https://pressreader.com, accessed November 11, 2018, https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/20181021/281569471706302

> எவ்விதமானதும் அத்தியாவசிய சேவை அல்லது விநியோகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய மிகமுக்கியமான உட்கட்டமைப்பு அல்லது பௌதிகவள வசதி ஆகியவற்றிற்குத் தடை ஏற்படுத்துதல் அல்லது சேதத்தினை ஏற்படுத்துதல் அல்லது அவற்றில் தலையீடு செய்தல்.[55]

பயங்கரவாதத்திற்கு எதிராக வரையப்படும் இச்சட்டமூலம் யுத்தகாலத்தின் போது நியாயப்படுத்தக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கையாள வரையப்படவில்லை என்பதையும் அபிவிருத்திச் சுலோகம் பகட்டாரவாரப் பேச்சாக மாறியுள்ள யுத்தத்திற்குப் பின்னைய சூழமைவிலேயே வரையப்படுகிறது என்பதையும் கவனிப்பது முக்கியமானதாகும்.

## எது மையமானது: தேசியப் பாதுகாப்பா அல்லது மனிதப் பாதுகாப்பா?

இந்த யுகத்தில் ஆட்சியதிகாரவாதம் மிகவும் விரும்பப்படுகின்ற அரசியல் சித்தாந்தமாகத் துரிதமாக மாறிவந்தால் மனித உரிமைகளைப் பாதுகாக்க என்ன எதிர்பார்ப்பினை நாம் கொண்டிருக்கலாம்? மனித உரிமைகளின் முடிவுக்காலம் இதுவா?

> சவால்களின் அளவினைத் தாண்டி, நாம் கண்ணோட்டத்தினைப் பேணவேண்டும். மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்பது ஒருபோதுமே கருத்தொருமிப்புமிக்க கருத்திட்டமாக இருந்ததில்லை. அது எப்போதுமே போராட்டத்தின் விளைவாகவே இருந்திருக்கிறது. நவீன மனித உரிமைகள் ஆளுகை முறைமை ஆழமான ஆட்சியதிகாரவாதச் செயலின்மையின் சாம்பல் மேட்டிலிருந்தும் உலகம்

55. பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானி, 2018 செப்டெம்பர் 14ன் பகுதி II. 15.3 (2). (d), (g), (h). accessed October 18, 2018. http://www.documents.gov.lk/files/bill/2018/9/528-2018_E.pdf

முன்னெப்பொழுதும் கண்டிராத தீச்சுவாலையில் இருந்தும் எழுந்துள்ளது”[56].

மனித உரிமைகளுக்கு எதிரான வெகுஜன அரசியல்வாதிகளின் சூழலின் காரணமாக மனித உரிமைகளை அடைந்துகொள்வது தொடர்ந்து நடைபெற்றுவரும் போராட்டம் என்பதை ஞாபகப்படுத்துவதும் புரிந்துகொள்வதும் முக்கியமானதாகும். எனவே இப்புதிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு மனித உரிமைகள் சொல்லாடல் கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் எந்தளவு உறுதியானது என்பதைப் பகுப்பாய்வு செய்வது முக்கியமானதாகும். தற்போது மனித உரிமைகள் முகங்கொடுக்கும் வெகுஜன அரசியல்வாதிகளின் சவால்களுக்குப் பின்னாலுள்ள பிரதான வாதம் தேசிய பாதுகாப்பு, இறைமை மற்றும் தேசிய பொருளாதாரம் ஆகியவற்றிற்காக மனித உரிமைகள் நிறுத்தப்படலாம் என்பதாகும். இவ்வாதத்திற்கெதிராக மனித உரிமைகள் சொல்லாடல் உருவாக்கியுள்ள எதிர்வாதங்களை நாம் ஆராயவேண்டும்.

தேசிய பாதுகாப்பு எனும் குறுகிய கருத்தியலில் இருந்து மனிதப் பாதுகாப்பு எனும் அனைத்தையும் தழுவிச் செல்லும் கருத்தியலுக்கு இடைமாற்றம் அடைவதற்கான தருணம் இதுவேயாகும். செல்வந்த நாடுகளில் உள்ள மக்கள் தமது வீதிகளில் நிகழும் குற்றச்செயல்களின் அச்சுறுத்தல்களில் இருந்தும் போதைப் பொருள் யுத்தத்தில் இருந்தும் பாதுகாப்புத் தேடுகின்றனர். வறிய தேசங்களில் உள்ள மக்கள் பட்டினி, நோய் மற்றும் வறுமை ஆகியவற்றின அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்புத் தேடுகின்றனர்[57]

56. பிலிப் அல்ஸ்டன். “The Populist Challenge to Human Rights.” in Journal of Human Rights Practice, Volume 9, Issue 1, (2017): 1–15.

57. மனித அபிவிருத்தி அறிக்கை 1994, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) Oxford: Oxford பல்கலைக்கழக அச்சகம் 1994, 22.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் 1994 ஆம் ஆண்டு அறிக்கை மனிதப் பாதுகாப்பிற்கான ஏழு பிரதான வகைகளை அடையாளங் கண்டுள்ளது: பொருளாதாரப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, சமுதாயப் பாதுகாப்பு மற்றும் அரசியல் பாதுகாப்பு. மனிதப் பாதுகாப்பின் மானுட மையப்படுத்தலை வலியுறுத்தும் 2012 ஆம் ஆண்டு, செப்டெம்பர் 10 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுச்சபைப் பிரகடனமான 66/290 இனை அடிப்படையாகக் கொண்ட பொதுவான புரிதலை ஐ.நா அங்கீகரித்தது. இவ்வாறு மனிதர்களை மையப்படுத்துகின்றமை அபிவிருத்திக்கான உரிமை பற்றிய ஐ.நா பிரகடனம் (1986)[58], சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி பற்றிய ரியோ பிரகடனம் (1992)[59] மற்றும் நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகள்[60] போன்ற எண்ணற்ற மனித உரிமை உடன்படிக்கைகளில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.[61] உற்பத்தித் திறன்மிக்க மற்றும் ஊதியம் வழங்கும் தொழிலில் இருந்து அல்லது அரச நிதியில் தங்கியுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு வலையில் இருந்து பெற்றுக்கொள்ளும் அடிப்படை வருமானத்தின் ஸ்திரத்தன்மை பொருளாதாரப் பாதுகாப்பிற்கு அவசியமானது என்பதாக 1994 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அறிக்கை குறிப்பிடுகிறது. ஆபத்தான தொழில்களை உருவாக்கும் தொழில் ஏற்பாடுகள் பொருளாதாரப் பாதுகாப்பினைச் சமரசத்துக்கு உற்படுத்துகின்றன.

---

58. அபிவிருத்திக்கான உரிமை பற்றிய பிரகடனம், www.un.org, accessed on December 16" 2018, http://www.un.org/documents/ga/res/41/a41r128.htm.

59. சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி பற்றிய ரியோ பிரகடனம் www.unesco.org, accessed on December 16" 2018, http://www.unesco.org/education/pdf/RIO_E.PDF.

60. 2015 செப்டெம்பர் 25 திகதியிடப்பட்ட பொதுச்சபை தீர்மானம், www.un.org, accessed on December 16, 2018, http://www.un.org/ga/search/view_doc.asp?symbol=A/RES/70/1&Lang=E.

61. மனித அபிவிருத்தி அறிக்கை 1994, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) Oxford: Oxford பல்கலைக்கழக அச்சகம் 1994, 22.

> மிகவும் ஆபத்தான தொழில் வாய்ப்பினை நோக்கிய உலகளாவிய நகர்வானது தொழிற்துறைகளின் கட்டமைப்பிலுள்ள மாற்றங்களையே பிரதிபலிக்கிறது தொழில் வாய்ப்பு தற்காலிகமானதாக அல்லது பகுதிநேர அடிப்படையிலானதாக இருப்பதற்கான மேலும் தொழிற்சங்கங்களால் குறைவாகப் பாதுகாக்கப்படுவதற்கான அதிக சாத்தியங்கள் உள்ளன.[62]

வெகுஜன மக்கள் பிரதிநிதிகள் எனத் தம்மை அழைப்பவர்கள் ஏற்படுத்தும் சவால்களில் எழுப்பப்படும் வாதங்கள் ஏற்கனவே காலங் கடந்தவையாகும். எவ்வாறாயினும் இக்காலங்கடந்த வாதங்கள் மேற்குலகிலும் இலங்கைச் சமூகங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டு வருவதை மிகப்பொதுவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. மனித உரிமைகள் சொல்லாடலில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு வழங்கப்படும் ஆதிக்கமிகு அந்தஸ்தினாலேயே இது நிகழ்ந்துள்ளது. மேட்டுச் சமூகத்தில் உள்ளவர்கள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றியே மிகவும் அக்கறை கொண்டுள்ளனர். ஏனெனில் சமூகத்தில் அவர்களுக்குள்ள சிறப்புரிமைமிக்க அந்தஸ்தின் காரணமாக அவர்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் அரிதாகவே சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றதென பிலிப் அஸ்டன் குறிப்பிடுகின்றார.[63] மாறாக, சமுதாயங்களில் சிறப்புரிமைமிக்க மேட்டுக்குடி வட்டங்களைச் சாராத மிகப்பெரும்பான்மையினரின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் அதிகரித்த அளவில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.[64] இச்சூழமைவில் தொழிலாளர் போராட்டங்களுக்கான மரபுரீதியான அணுகுமுறைகளை

---

62. Ibid, 25.

63. பிலிப் அல்ஸ்டன். "The Populist Challenge to Human Rights." in Journal of Human Rights Practice, Volume 9, Issue 1, (2017): 13.

64. வேர்ஜினயா பிராஸ் கோமஸ், "Beyond civil and political rights: Economic, social and cultural rights are human rights too," Interview by Vidura Prabath Munasinghe, LST Review Vol.9 Issue 346. (Colombo: Law & Society Trust, 2018), 27-32.

அதிரடியானதாக மாற்றுகின்ற ஒன்றாக மேட்டுக் குடியல்லாத இக்குழுக்களினால் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் போராட்டங்களின் போது உருவாக்கப்பட்டு வரும் புதிய அணுகுமுறைகள் மற்றும் உபாயமார்க்கங்களை ஆராய்வது மனித உரிமைகளின் கருத்துருவாக்கத்தினை பரவலாக்குவதைப் போன்ற முக்கியத்துவத்தினைக் கொண்டதாகும்.

## பச்சதாபமும் கூட்டொருமையும்

டெலிகொம் மனிதவலுப் போராட்டம் ஆரம்பத்தில் அரசியல்வாதிகளில் தங்கயிருந்த அறிகுறிகளைக் காட்டிய போதிலும் (மேலே விபரிக்கப்பட்டவாறு) அது பின்னர் இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுப் புலமையாளர்கள் மற்றும் கலைஞர்கள் போன்ற பல்வேறு செயற்படுனர்களைக் கொண்ட ஓர் இயக்கமாகப் பரிணமித்தது. இதன் காரணமாக, அது தீவிரமான மற்றும் அதிரடியான ஒரு தளமாக மாறி அக்காலகட்டத்தில் நாட்டில் உருவாகிய ஏனைய உரிமைப் போராட்டங்களுடன் ஒத்துழைப்பினை உருவாக்கியது. உதாரணமாக, துறைமுக நகரம்[65] என அறியப்பட்ட கொழும்பு சர்வதேச நிதி நகர நிர்மாணத்தினால் பொருளாதார ரீதியாகவும் சுற்றுச்சூழல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மக்களை அணிதிரட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்பக் கலந்துரையாடல்களில் டெலிகொம் மனிதவலுத் தொழிலாளர்கள் பங்குபற்றினர். வடக்கிலே இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட

65. கொழும்பு சர்வதேச நிதி நகரம் என்பது ஒரு விசேட நிதி வலயமாகும். இது மீட்டெடுக்கப்பட்ட 262 ஹெக்டேயர் நிலப்பரப்பில் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வெவ்வேறு காரணங்களுக்காக இக்கருத்திட்டம் பலரினாலும் விமர்சிக்கப்பட்டுள்ளது. இது பாரதூரமான சுற்றாடல் தாக்கத்தினை ஏற்படுத்தும் என சூழலியலாளர்கள் வாதிட்டு வருகின்றனர். 2014 இல் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கொழும்பு துறைமுகத்திற்கு வடக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற மீனவர்களின் வாழ்வாதார காணிநிரப்பு செயற்பாடுகள் பாதித்துள்ளன. புதிய நிலம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் கருத்திட்டத் தளத்திலிருந்து நீண்டு செல்லும் 75 கிலோமீற்றர் பரப்பில் கடல் அரிப்பு உக்கிரமடைந்துள்ளது. கருத்திட்டத்தினால் பல மீனவ சமுதாயங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

தனியார் காணிகளை அரசாங்கம் மீள வழங்கவேண்டும் எனக்கோரி ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களிலும் அவர்கள் இணைந்துக் கொண்டனர்[66]. இக்கூட்டொருமை இயக்கங்களின் விளைவாக ஏனைய உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டுவந்த மக்கள் தமது வேலை நிறுத்தம் காரணமாகப் பொருளாதாரக் கஸ்டங்களுக்கு முகங்கொடுத்த சிறிலங்கா டெலிகொம் தொழிலாளர்களுக்குத் தமது ஆதரவினை வழங்கினர். உமா ஓயா கருத்திட்டத்தினால் ஏற்பட்ட அழிவுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த விவசாயிகள்[67] தமது மரக்கறி அறுவடையின் பகுதியினைப் பொருளாதார ரீதியாக வருந்திய டெலிகொம் தொழிலாளர்களுக்கு வழங்கினர். இதேபோன்று தமது வாழ்வாதாரத்தின் மீது துறைமுக நகரத்தின் பாதகமான விளைவுகள் ஏற்படுத்திய தாக்கத்திற்கு எதிராகப் போராடிய மீனவர்கள் தாம் பிடித்த மீன்களில் ஒரு பகுதியினை டெலிகொம் தொழிலாளர்களுக்கு வழங்கினர். மாற்று இசைக் கலைஞரான அஜித் குமாரசிரி தொழிலாளர்களை ஊக்கப்படுத்தி போராட்டக் களத்திலே இசை வழங்கினார்[68]. இக்கூட்டொருமைச் செயற்பாடுகள் டெலிகொம் தொழிலாளர்கள் உந்தத்தினைப் பெற்று தமது போராட்டத்தினை 87 நாட்கள் நடத்துவதற்கு உதவியது.

மாகம்புர துறைமுக மனிதவலுப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட செயற்பாட்டாளர் ஒருவர் குறிப்பிடுகையில் இப்போராட்டம் இரண்டு காரணங்களினால் வெளிக் குழுக்களிடமிருந்து

66. எல். ஹேமசந்திர, நேர்காணல், ஜீலை 3, 2018

67. உமா ஓயா பாரியளவிளான பல்நோக்கு கருத்திட்டமாக பண்டாரவளையில் நிறைவேற்றப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் நீர்மின்சார ஆழியினை நிர்மாணிப்பதற்காக 3.35 கிலோமீற்றர் சுரங்கத்தினை துளையிடும் பணிகள் 2014 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்டன. துளையிடல் ஆரம்பித்த சில நாட்களின் பின்னர் நிலக்கீழ் நீர் சுரங்கத்தினுள் நிறைய ஆரம்பித்தது. இதனால் சுரங்கத்தின் மேற்பரப்பில் இருந்த 7,000 வீடுகள் சேதமடைந்தன. மேலும் பெரும் நிலப்பரப்பில் நிலக்கீழ் நீர் வற்றியதுடன் விவசாய நிலங்களும் இதனால் பாதிக்கப்பட்டன. இவ்வாறான சடுதியான அழிவினால் மக்கள் அமைதியிழந்து ஆர்ப்பாட்டங்கள் 'உமா ஓயா பல் அழிவு கருத்திட்டத்திற்கு எதிரான மக்கள் முன்னனி' எனப் பெயரிடப்பட்ட குடை நிறுவனம் ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டன.

68. கே. கோட்டேகொட, நேர்காணல், ஜுன் 27, 2018

சார்பளவில் குறைந்த ஆதரவினைப் பெற்றுக்கொண்டது என்றார். அதாவது: ஹம்பாந்தோட்டை மிகவும் தூரத்தில் அமைந்துள்ள இடமாக இருந்தமை மற்றும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் அரசியல் நாட்டம் நன்கறியப்பட்ட விடயமாக இருந்தமை. தொழிலாளர்களில் அதிகமானவர்கள் முன்னைய அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக இருந்தபோதிலும் முன்னாள் ஜனாதிபதியின் அரசியல் முகாம் அவர்களின் பலமான தளத்தில் பாரிய செல்வாக்கினைக் கொண்டிருக்கலாம் என்பது தெளிவானதாக இருந்தது. நீதிமன்ற வழக்குகளுக்கான சட்டரீதியான உதவியினைத் தவிர தொழிலாளர்கள் அவர்களிடமிருந்து எவ்விதமான உதவியினையும் பெறாமலிருப்பதையிட்டுக் கவனமாக இருந்தனர். தொழிலாளர்களின் பொருளாதாரக் கஸ்டங்கள் மோசமான நிலைமையினை அடைந்தபோது, அவர்கள் சூரியவெவ, ஹம்பாந்தோட்டை மற்றும் வலஸ்முல்லை போன்ற அண்மையிலுள்ள வாராந்தச் சந்தைகளுக்குச் சென்று மக்களுக்கு அவர்களின் போராட்டங்களைப் பற்றிக் கூறி அவர்களின் உதவியினைக் கோரினர்.[69]

மறுபுறத்திலே அசோசியேடட் பெட்டரி மனுபக்கசரரில் தொழிலாளர் போராட்டம் தனித்துவமானதாக மாறியது. இதற்கான காரணம் நிரந்தரத் தொழிலாளர்களும் மனிதவலுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் இணைந்து கொண்டமையாகும். அதிகமான வேலைத்தளங்களில் ஊழியப்படை இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது: நிரந்தரமான தொழிலாளர்கள் மற்றும் மனிதவலுத் தொழிலாளர்கள். தொழில் வழங்குனர்கள் ஒரு குழுவினை மற்றைய குழுவிற்கு அச்சுறுத்தல் மிக்கவர்கர்களாகச் சித்தரித்து இவ்விரண்டு குழுக்களுக்குமிடையில் வேண்டுமென்றே ஒரு பிரிவினைப் பேணிவருகின்றனர். ஒரு குழு தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தாலும் தடையற்ற உற்பத்தியினைத்

69. சாகர, நேர்காணல், ஜீலை 22, 2018

தம்மால் தொடர முடியுமென்பதை நிர்வாகம் உறுதிப்படுத்துகிறது. ஆனால் அசோசியேடட் பெட்டரி மனுபக்கசரரின் விடயத்தில் இருவகையான தொழிலாளர்களும் தமது தொழிற்சங்க நடவடிக்கையில் ஒன்றுபட்டிருந்தனர்.

இம்மூன்று போராட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அணுகுமுறைகள் மற்றும் உபாயமார்க்கங்களை நாம் பரிசீலிக்கையில் தொழிலாளர்களின் கூட்டொருமை மற்றும் கூட்டுப் போராட்டம் ஆகியவற்றினைக் கீழறுக்கும் கட்சி அரசியலின் மிகப் பொதுவான திட்டத்திற்கு அப்பால் கற்றுக்கொள்ளவேண்டிய சாதகமான பாடங்கள் உள்ளன என்பது சான்றாகக் காணப்படுகிறது. டெலிகொம் மனிதவலுப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்குபற்றிய ஒரு பெண் செயற்பாட்டாளர் தனது அனுபவத்தினைப் பின்வருமாறு விபரிக்கின்றார்:

> நாம் நினைப்பதைவிட மக்கள் மிகவும் அதிரடியானவர்களாக உள்ளனர். ஆனால் போராட்டக் களத்தில் மாத்திரமே அவர்கள் அதிரடியானவர்களாக உள்ளனர். ஒரு குறிப்பிட்ட தளத்தினுள் மாத்திரமே அவர்கள் பச்சாதாபத்தினையும் கூட்டொருமையினையும் சான்றாகக் காண்கின்றனர். அது அவர்களின் நாளாந்த வாழ்வின் ஏனைய தளங்களுக்கு நீட்சியடைவதில்லை[70] இதுவே அனைத்து உரிமைப் போராட்டங்களின் முடிவிலும் பொதுவாக வெளிப்படுத்தப்படும் உணர்வாகவுள்ளது. உமாஓயா, ரதுபஸ்வல[71] மற்றும்

70. எல். ஹேமசந்திர, நேர்காணல், ஜீலை 3இ 2018

71. இறப்பர் கையுறைகளை தயாரிக்கும் கம்பெனி அதன் இரசாயன கழிவுகளை வெளியிட்ட காரணத்தினால் வெலிவேரிய மற்றும் ரதுபஸ்வெல ஆகிய கம்பஹா மாவட்டத்தை சேர்ந்த பிரதேசங்களிலுள்ள 28 கிராம சேவையளர்களின் நிலக்கீழ் நீர் மாசடைந்த காரணத்தினால் உள்ளூர் மக்கள் தொழிற்சாலையினை பிரதேசத்திலிருந்து அகற்றுமாறு கோரியும் தூயநீரினை வழங்குமாறு கோரியும் 'சியன சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்' எனும் பெயரிலே எதிர்ப்பு இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தனர். 2013 ஆகஸ்ட் முதலாம் திகதி ஆர்ப்பாட்டத்தின் மீது இராணுவத் துருப்புக்கள் தாக்குதல்கள் நடத்தி 3 இளைஞர்களை கொன்று 50ற்கும் மேற்பட்டவர்களுக்கு காயம் ஏற்படுத்தினர். இறுதியில் பிரதேசத்தில் இருந்து தொழிற்சாலை அகற்றப்பட்டது.

பாணம[72] போராட்டங்களின் போது அதிரடியான தீர்மானங்களை எடுத்து ஆச்சரியமூட்டும் போராட்டக் குணத்தினைக் காட்டிய மக்கள் அக்குணாதிசயங்களை போராட்டத் தளத்திற்கு வெளியே காட்டவில்லை.[73]

## முன்செல்லும் வழி

மனித உரிமைகளுக்கு வெகுஜன அரசியல்வாதிகள் ஏற்படுத்தும் சவால்களுக்கு ஆதரவான வாதங்கள் பொருளாதார ஆட்சியதிகாரத்திற்கு உகந்த சூழலைத் தொடர்ந்து உருவாக்குவதுடன் ஜனநாயகம், வகைப்பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் கோட்பாடுகளையும் புறக்கணிக்கிறது. மறுபுறத்திலே இப்பொருளாதார ஆட்சி அதிகாரவாதத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் ஒழுங்ககற்றல் மற்றும் நெகிழ்வுத்தன்மை மிக்க தொழில் ஆகியவற்றின் உபாயமார்க்கங்கள் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைக் கீழறுக்கின்றன. இந்த ஆய்வில் கலந்துரையாடப்பட்டுள்ள மூன்று போராட்டங்களிலும் இந்த யதார்த்தமே சித்தரிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் தேசிய பாதுகாப்பு என்பதன் அடிப்படையில் மனித உரிமைகளுக்கு எதிரான வெகுஜன அரசியல்வாதிகளின் வாதம் இனிமேலும் செல்லுபடியாகது. மக்களின் பொருளாதார உரிமைகள் ஆபத்தில்

72. 2010 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள பாணம பிரதேசத்தில் 40 வருடங்களுக்கு மேலாக பயிர் செய்து வந்த சுமார் 350 குடும்பங்களை அரசாங்கம் பலவந்தமாக வெளியேற்றியது. பின்னர் அவர்களின் காணிகளை இராணுவ நிறுவகமொன்றினை அமைப்பதற்காக பெற்றுக்கொண்டது. பின்னர் இந்த காணிகளை சுற்றுலாத்துறைகளை ஊக்குவிப்பதற்கு பயன்படுத்துவதென அரசாங்கம் தீர்மானித்தது. இந்த காணிகளில் பயிர் செய்து வந்த மக்கள் 'பாணன்பத்துவவினை பாதுகாக்கும் இயக்கம்' என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கி நீடித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி தமது காணிகளை மீளத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

73. விதுர முணசிங்க. "Waiting for Mahinda mahaththaya: 2018 Local Government Election". In LST Review Vol. 29 Issue 345. (Colombo: Law & Society Trust, 2018), 10-19.

இருக்கும்போது மனிதப் பாதுகாப்பினைப் பெற்றுக்கொள்ள முடியாது. இச்சூழமைவில் உரிமைகள் சொல்லாடலில் தாராளவாத மேட்டுக் குடியினரால் பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் போராட்டங்களுக்கு குறைந்த முக்கியத்துவம் வழங்காமை முக்கியமானதாகும். அரசியல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் அவை முன்னுரிமைப்படுத்தப்படல் வேண்டும். மனித உரிமைகளைத் தொடர்ந்து நடைபெறும் போராட்டமாக அடையாளம் காண்பது முக்கியமானதாகும் என்பதுடன் பல்வேறு வகையான மனித உரிமைகள் மீறல்களினால் வருந்துவோர் மத்தியில் கூட்டொருமை வலையமைப்பினை உருவாக்குவதும் முக்கியமானதாகும். மேலும் சமூகத்தில் அனைத்து வகையான சமத்துவமின்மைகளையும் இல்லாதொழிக்காது மனித உரிமைகளைப் பூரணமாக அடைந்துகொள்ள முடியாது என்பதைப் புரிந்துகொள்வது அவசியமானதாகும். இப்புரிதலே எமது சொந்த மனித உரிமைப் போராட்டத் தளங்களுக்கு வெளியே கூட்டொருமையினையும் பச்சாதாபத்தினையும் விஸ்தரிப்பதற்கு எம்மை இட்டுச்செல்லும். ■

## நூற்பெயர்க் கோவை

அல்ஸ்டன், பிலிப். "The Populist Challenge to Human Rights." I*n Journal of Human Rights Practice,* Volume 9, Issue 1, 1-15. Oxford: Oxford University Press, 2017.

குமாரசுவாமி, ராதிகா. "International Human Rights: Dispelling the Myths," https://groundviews.org, accessed November 15, 2018. https://groundviews.org/2014/08/28/international-human-rights-dispelling-the-myths-by-radhika-coomaraswamy/

பயங்கரவாதத்திற்கெதிரான சட்டமூலம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி, பகுதி II செப்டெம்பர் 14, 2018, Sec. 15.3 (2). (d), (g), (h). Accessed October 18, 2018. http://www.documents.gov.lk/files/bill/2018/9/528-2018_E.pdf

எட்ஜெல், ஸ்டீபன். Sociology of Work: Continuity and Change in Paid and Unpaid Work, London: Sage Publications, 2006, 1-27.

கோமெஸ், வேர்ஜினியா பிராஸ் "சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு அப்பால்: பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளும் மனித உரிமைகளே", விதுர பிரபாத் முணசிங்கவின் நேர்காணல் LST Review Vol.9 Issue 346, Colombo: Law & Society Trust, 2018, 27-32.

குண்டுஸ் கனன். மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி: தொடர்ச்சியான அணுகுமுறைக்கான உலக வங்கியின் தேவை, லண்டன், லண்டன் பொருளியல் கல்லூரி 2004.

ஹார்வே, டேவிட். *A Brief History of Neo-Liberalism,* Oxford: Oxford University Press, 2006.

ஹார்வே, டேவிட். *Neoliberalism and Restoration of class power.* Accessed September 22, 2018, https://gsnas.files.wordpress.com/2007/10/harvey080604.pdf.

ஹார்வே, டேவிட். "Spaces of Neo-Liberalism: Towards a Theory of Uneven Geographical Development," Hettner Lecture 2004, Franz Steiner Verlag, 2005, https://d-nb.info/974905585/04.

மனித அபிவிருத்தி அறிக்கை 1994 ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக் கருத்திட்டம் Oxford: Oxford University Press, 1994.

லீ, திமொதி. பி. "பிரெக்சிட்: ஐரோப்பிய சங்கத்தினை விட்டு வெளியேற பிரித்தானியாவுக்கான 7 முக்கியமான வாதங்கள்"www.vox.com, accessed November 15, 2018, https://www.vox.com/2016/6/22/11992106/brexit-arguments.

முணசிங்க, விதுர. "Waiting for Mahinda mahaththaya: 2018 Local Government Election". In LST Review Vol. 29 Issue 345. Colombo: Law & Society Trust, 2018), 10-19.

முணசிங்க, விதுர. Reimagining *'The Worker' and Resistance in the Neo-Liberal Era.* Colombo: Law & Society Trust, 2018.

கொழும்பு நீதவான் நீதிமன்றம் வழக்கு இலக்கம். B 4132/16.

கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம்: 3/2017/DSP.

டெய்லிநியூஸ். "Sri Lanka Telecom files a writ petition against Police inaction over manpower employees", accessed October 20, 2018, http://www.dailynews.lk/2017/03/24/law-order/111439/sri-lanka-telecom-files-writ-petition-against-police-inaction-over.

Pressreader.com. 2018 ஒக்டோபர் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கெதிரான சட்டமூலத்தினைச் சவாலுக்குட்படுத்தி மேல்நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் வெவ்வேறு தரப்புக்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.", https://pressreader.com, accessed November 11, 2018, https://www.pressreader.com/sri-lanka/sunday-times-sri-lanka/20181021/281569471706302

Newsfirst.lk. "Hambanthota Port employees continue strike action", accessed October 06, 2018. https://www.newsfirst.lk/2016/12/09/hambantota-port-employees-continue-strike-action/

Roar.media. "What happened in Hambanthota". Accessed October 07, 2018. "https://roar.media/english/life/reports/what-happened-in-magampura/

slt.lk. Sri Lanka Telecom, http://slt.lk, accessed November 11, 2018, http://www.slt.lk/en/about-us/profile/subsidaries.

Sundayobsever.lk. "Attack on Hambanthota port workers: state minister rejects allegations". Accessed October 06, 2018. http://www.sundayobserver.lk/2016/12/11/news/attack-hambantota-port-workers-state-minister-rejects-allegations

Sundayobsever.lk. “Enjoying order against SLT trade union protests”, Accessed October 18, 2018, http://www.sundayobserver.lk/2017/01/15/business/enjoining-order-against-slt-trade-union-protests?page=1

பயங்கரவாதத்திற்கெதிரான சட்டமூலம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி, பகுதி II செப்டெம்பர் 14, 2018, Sec. 15.3 (2). (d), (g), (h). accessed October 18, 2018. http://www.documents.gov.lk/files/bill/2018/9/528-2018_E.pdf

un.org. அபிவிருத்திக்கான உரிமை பற்றிய பிரகடனம். accessed on December 6, 2018, http://www.un.org/documents/ga/res/41/a41r128.htm

unesco.org. சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி பற்றிய ரியோ பிரகடனம், accessed on December 6, 2018, http://www.unesco.org/education/pdf/RIO_E.PDF

un.org. 25 செப்டெம்பர் 2015 இல் பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரகடனம், accessed on December 6, 2018. http://www.un.org/ga/search/view_doc.asp?symbol=A/RES/70/1&Lang=E

worldmaritimenews.com. “Sri Lanka Navy breaks up protests at Hambanthota Port,” accessed November 16, 2018, https://worldmaritimenews.com/archives/208445/sri-lanka-navy-breaks-up-protests-at-hambantota-port/

**அனுசரணை**

FORDFOUNDATION

diakonia
PEOPLE CHANGING THE WORLD

ISBN 978-955-1302-81-8